A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email : tneochennai@gmail.com Web site : www.tnerc.tn.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 88 / 2024</u>**

திருமதி ஜா. ஸ்டெல்லா மேரி,
கதவு எண் 60, லூர்து அன்னை இல்லம்,
புனித அந்தோணியர் கோவில் தெரு,
இலுப்பூர் – 622 102, புதுக்கோட்டை மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு J. மரிய திலிப்பன் ராஜ்)

எதிர்

1) மேற்பார்வை பொறியாளர்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – 620 020.

2) செயற்பொறியாளர்/ இ&கா/ கிழக்கு/திருச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/ பெருநகர்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
தரைதளம், காமராஜ் கட்டிடம், மன்னார்புரம் மெயின் ரோடு,
மன்னார்புரம் திருச்சி – 620 020.

3) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / கிராபோர்ட்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/ பெருநகர்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
34, 43, பாப்பா காலனி, எடமலைபட்டிபுதூர், திருச்சி – 620 012.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு M. கணேசன், செயற்பொறியாளர்/ இ&கா/ கிழக்கு/திருச்சி
திரு E. சந்திரசேகரன், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / கிராபோர்ட்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 12-11-2024</u>**

**<u>கேட்புரை நாள்: 24-01-2025</u>**

**<u>ஆணை நாள்: 31-01-2025</u>**

12.11.2024 அன்று பெறப்பட்ட திருமதி ஜா. ஸ்டெல்லா மேரி, கதவு எண் 60, லூர்து அன்னை இல்லம், புனித அந்தோணியர் கோவில் தெரு, இலுப்பூர் – 622 102, புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 88/2024 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 24.01.2025 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

<u>**ஆணை**</u>

**1. <u>மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:</u>**

தனக்கு சொந்தமான நிலத்தின் வழியாக தனக்கு தெரியாமல் தனது அனுமதியின்றி இடையூறு ஏற்படுத்தும் வகையில் வழங்கிய மின் இணப்புகளை அகற்றுமாறும், தனக்கு ஏற்பட்ட மனஉளைசலுக்கு இழப்பீடு வழங்குமாறும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

**2.0 <u>வழக்கின் சுருக்கம்:</u>**

2.1 தனக்கு சொந்தமான நிலத்தின் வழியாக தனக்கு தெரியாமல் தனது அனுமதியின்றி இடையூறு ஏற்படுத்தும் வகையில் வழங்கிய மின் இணப்புகளை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேற்கூறிய மின் இணைப்புகளின் அடிப்படையில் கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்குறிப்பிட்ட மின் இணைப்புகளின் Service Wire அனைத்தும் பொதுப்பாதை வழியாகவே செல்வதாகவும், service wire–களை வேறுபாதையில் மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை எனவும், மேலும் மேற்படி சர்வீஸ் வயர்களும் மனுதாரருக்கு எவ்வித இடையூறும் இல்லாதவாறே அமைக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே தனக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் வழங்கப்பட்டுள் மின் இணைப்புகளின் service wire–களை அகற்றுமாறு மேல்முறையீட்டாளர்

30.05.2024 அன்று திருச்சி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், திருச்சி மின்பகிர்மான வட்டம் 27.08.2024 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>

3.1 திருச்சி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 27.08.2024 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

> *"இருதரப்பு சாட்சிகளையும், ஆவணங்களையும் பார்வையிட்ட மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தலைவர் மற்றும் உறுப்பினர்கள் திருச்சி, எடமலைப்பட்டிபுதூர் புனித அந்தோனியார் கோவில் தெரு, கதவு எண்: 37/38 ல் உள்ள 640 ச.அடி பரப்பளவு கொண்ட இடமானது மனுதாரர் திருமதி. ஸ்டெல்லா மேரி அவருக்கு முறைப்படி தான செட்டில்மென்ட்டாக அவரது தாயார் கடந்த 1991 ஆம் ஆண்டில் கொடுத்திருப்பதும். மனுதாரருடைய நிலத்தின் அருகில் உள்ள இடமானது திரு மரியா ஆரோக்கியம் அவருக்கு சொந்தமானது என்பதும் தெரிய வருகிறது. எனவே, மனுதாரருடைய நிலத்தின் வழியே வேறொருவருக்கு வழங்கப்பட்ட மின் இணைப்புகளின் Service Wire–களை வேறு பாதையில் மாற்றி அமைக்குமாறு எதிர்மனுதாரருக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும், Service Wire மாற்றி அமைக்கப்படவேண்டிய இடத்தினை மனுதாரர் எதிர்மனுதாரருக்கு தெரிவித்து ஒத்துழைப்பு நல்கிடவும் அறிவுறுத்தப்பட்டு மன்றம் முடித்து வைக்கப்பட்டது."*

4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 24.01.2025 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு J. மரிய திலிப்பன் ராஜ் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு M. கணேசன், செயற்பொறியாளர்/ இ&கா/ கிழக்கு/திருச்சி மற்றும் திரு E. சந்திரசேகரன், உதவி செயற்பொறியாளர்/ இ&கா / கிராபோர்ட், திருச்சி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதங்களை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 தனக்கு சொந்தமான ஓட்டுவீட்டின் கூரை மீது மற்றும் தனது நிலத்தின் வழியாக வேறு ஒரு நபர்களுக்கு விதிகளை மீறி ஐந்து மின் இணைப்புகள் வழங்கப்பட்டதாகவும், தான் புகார் அளித்த பிறகு, ஓட்டு வீட்டின் கூரை மீது சென்ற மூன்று Service Wire–களை மட்டும் அகற்றிவிட்டதாகவும், தற்போது அந்த ஐந்து மின் இணைப்புகளின் Service Wire–களும் தனக்கு சொந்தமான பட்டா நிலத்தின் வழியாக செல்கின்றதாகவும், ஆகவே தனது இடத்தின் வழியாக விதிகளுக்கு மாறாக வேறொரு நபருக்கு மின் இணைப்புகள் வழங்கப்பட்டது தனது உரிமைகளை மீறும் செயல் எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மின் நுகர்வோர் குறைதீர் மன்றம் இறுதி உத்தரவு பிறப்பித்து 45 நாட்கள் முடித்த நிலையிலும், தான் தனது மகன் வாயிலாக Superintending Engineer, Trichy Circle & Executive Engineer/East/Trichy TANGEDCO உள்ளிட்ட அதிகாரிகளிடம் பலமுறை கேட்டும், உள்நோக்கதொடு உத்தரவை அமல்படுத்த மறுத்து வருவதாகவும், TAMIL NADU ELECTRICITY DISTRIBUTION CODE, Notification No. TNERC/DC/8/1, Dated 21.07.2004 விதிமுறைகளை மீறி தனது நிலத்தின் வழியாக தனது அனுமதியின்றி வேறு நபர்களுக்கு சட்டவிரோதமாக மின் இணைப்பு வழங்கி TANGEDCO அதிகாரிகள் தனது உரிமைகளை மீறி இழப்புகளை ஏற்படுத்தியமைக்கு, இழப்பீடு கோரியிருந்ததாகவும், இழப்பீடு வழங்குவது பற்றி எந்த உத்தரவும் பிறப்பிக்கவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 மேற்கண்ட முகவரியில் உள்ள ஒட்டு வீடு மற்றும் வீட்டின் முன் உள்ள காலி இடம் முழுதும் தனக்கு மட்டுமே சொந்தமானது என்பதை நிரூபணம் செய்ய தனது பதிவு செய்யப்பட்ட பத்திரம் மற்றும் பட்டா ஆகியவற்றின் மூலம் மின் நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் விசாரணையில் நிரூபித்துள்ளதாகவும், தான் புதுக்கோட்டை மாவட்டத்தில் வசித்து வருவதாகவும், மேற்படி ஐந்து மின் இணைப்புகள் வழங்கப்படும் பொழுது, நிலத்தின் உரிமையாளராகிய தனக்கு எந்த அறிவிப்பும் செய்யாமல் தனக்கு தெரியாமல் TANGEDCO அலுவலர்கள் வழங்கியுள்ளதாகவும், TAMIL NADU ELECTRICITY DISTRIBUTION CODE, Notification No. TNERC/DC/8/1, Dated 21-07-2004 படி நிலத்தின் உரிமையாளராகிய தனது அனுமதிக் கடிதம் இல்லாமல் தனது இடத்தின் வழியாக மூன்றாம் நபருக்கு மின் இணைப்பு வழங்கியது தவறு எனவும், மின் வாரியத்தின் இத்தகைய செயல்கள் தனது அரசமைப்பு உரிமையாகிய (constitutional right] சொத்துரிமையை நேரடியாக மீறுவதாக உள்ளதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 விதிகளை மீறி ஐந்து மின் இணைப்புகள் வழங்கி TANGEDCO அதிகாரிகளால் தனக்கு ஏற்படுத்தப்பட்ட இழப்புகளுக்கு TAMIL NADU ELECTRICITY DISTRIBUTION CODE, Notification No. TNERC/DC/8/1, Dated 21-07-2004, Page No: 104 - 27. Requisitions for Supply of Energy படி தகுந்த பண இழப்பீடு வழங்கவும் / பெற்றுத்தருமாறும், TANGEDCO அதிகாரிகள் விதிகளை மீறி ஐந்து மின் இணைப்புகள் வழங்கியதால் தான் தனக்கு மிகுந்த சிரமமும், இழப்பும், மன உளைச்சலும் ஏற்பட்டுள்ளதாகவும், எனவே, விதிகளை மீறி வேறு நபர்களுக்கு தனது அனுமதியின்றி தனது இடத்தின் வழியே மின் இணைப்பு வழங்கிய அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும், உள்நோக்கத்தோடு மின் நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் உத்தரவை அமல்படுத்த மறுக்கும் செயற்பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளர் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 நிலத்தின் உரிமையாளராகிய தனக்கு தெரியாமல் தனது அனுமதி இல்லாமல் தனது நிலத்தின் வழியாக எந்த மின் இணைப்புகளும் வழங்ககூடாது என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 மேலும் மேல்முறையீட்டாளர் 27. Requisitions for supply of Energy - page No.103 - 104 கூறும் வழிகாட்டு நெறிமுறைகளின்படி மரிய ஆரோக்கியம் & ஞான சங்கீதா ஆகியோர் மின் இணைப்பு பெரும் முன், நிலத்தின் உரிமையாளர் திருமதி. ஸ்டெல்லா மேரி அவர்களிடம் இசைவு கடிதம் (consent letter) பெற்று அதனை மின் வாரியத்திற்கு சமர்பிக்கவேண்டும் (அல்லது) நிலத்தின் உரிமையாளர் இல்லாத போது (not available). அந்த நிலத்தின்/ சொத்தின் உரிமைக்கான கீழ்கண்ட ஏதேனும் ஒரு செல்லுபடியாகும் சான்றை (valid proof] சமர்பிக்கவேண்டும்

a) Registered power of attorney
b) Latest rent receipt issued prior to the date of application or lease deed

c) Possession order from appropriate authority
d) Decree or judgment of Courts

மட்டுமின்றி இருமடங்கு வைப்புத் தொகை செலுத்த சம்மதித்து அதற்கான பிணைப் பத்திரம் [indemnity bond) எழுதிக்கொடுக்கவேண்டும்

5.6 ஆனால் நிலத்தின் மீதான உரிமையை நிரூபிக்கும் எந்த ஆவணமும் சமர்பிக்காத மரிய ஆரோக்கியம், ஞான சங்கீதா ஆகியோருக்கு மேற்கண்ட TNERC விதிமுறைகளை மீறி சட்டவிரோதமாக திருமதி. ஸ்டெல்லா மேரி அவர்களது நிலத்தின் வழியாக அவரது அனுமதியின்றி அவருக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட ஐந்து மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | மின் இணைப்பு எண் | பெயர் | நாள் |
|---|---|---|---|
| 1 | 06-221-009-324 | மரிய ஆரோக்கியம் | 01.01.2006 |
| 2 | 06-221-009-325 | மரிய ஆரோக்கியம் | 01.01.2006 |
| 3 | 06-221-009-750 | மரிய ஆரோக்கியம் | 05.05.2005 |
| 4 | 06-221-009-1418 | ஞான சங்கீதா | 15.12.2014 |
| 5 | 06-221-009-2016 | ஞான சங்கீதா | 07.07.2020 |

5.7 ஆனால் 4 மாதங்கள் கழித்து 06/01/2025 அன்று செயற்பொறியாளர். கிழக்கு -திருச்சி குறிப்பிடும் Town Survey Land Register (கணினி பட்டா)-ன் படி மேற்படி 5 service wire-களும் பொதுபாதையில் செல்வதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.8 மேலும், Exhibit 5 Terms and Conditions for Supply of Electricity- பட்டியலிடப்பட்ட ஆவணங்களில் Town Survey Land Register (கணினி பட்டா} இல்லை. அதாவது Town Survey Land Register ஒரு ஏற்கத்தக்க ஆவணம் இல்லை எனவும், Exhibit 6)- TAMIL NADU ELECTRICITY DISTRIBUTION CODE, Notification No. TNERC/DC/8/1, page no: 123-124 In the case of joint property, ...consent letters from co-owners. If consent letter is not produced, an indemnity bond with enhanced security

deposit... கூறப்பட்டுள்ளது. ஒரு கற்பனைக்காக Town Survey Land Register (கணினி பட்டா)–வை ஏற்றுகொள்வதாக இருந்தாலும், அது திருமதி ஸ்டெல்லா மேரி & மரிய ஆரோக்கியம் ஆகியோரின் பெயரில் கூட்டு பட்டாவாக உள்ளது. எனவே. திருமதி ஸ்டெல்லா மேரி அவர்களது இசைவு கடிதம் consent letter இல்லமல் மரிய ஆரோக்கியம் அவர்களுக்கு வழங்கப்பட்ட மூன்று மின் இணைப்புகள் சட்டவிரோதமானவை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.9 இதன் மூலம் TNERC–ன் வழிகாட்டு நெறிமுறைகளை மீறி மேற்படி நபர்களுக்கு சட்டவிரோதமாக ஐந்து மின் இணைப்புகள் வழங்கி தனது அரசமைப்பு உரிமையாகிய [constitutional right] சொத்துரிமையை நேரடியாக மீறி violating my right to property. TANGEDCO அதிகாரிகள் தனக்கு நேர இழப்பையும். பொருள் இழப்பையும், தீராத மனஉளைச்சலையும் ஏற்படுத்தியுள்ளது நிரூபணமாகிறது எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:

6.1 மனுதாரர் தெரிவித்த இடமானது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது திருச்சி எடமலைப்பட்டி புதூர் புனித அந்தோனியார் கோவில் தெரு கதவு எண் 373 உள்ள நிலத்தில் மனுதாரர் திரு மரிய ஆரோக்கியம் மற்றும் திருமதி ஞானசங்கீதா அவர்களுக்கு வாரிய விதிகளின் படி கீழ்க்கண்டமின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

| மின் இணைப்பு எண் | உரிமையாளர் | மின் இணைப்பு வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|
| 06–221–009–323 | திருமதி ஸ்டெல்லாமேரி | 01–01–2006 |
| 06–221–009–324 | திரு மரிய ஆரோக்கியம் | 01–01–2006 |
| 06–221–009–325 | திரு மரிய ஆரோக்கியம் | 01–01–2006 |
| 06–221–009–750 | திரு மரிய ஆரோக்கியம் | 05–05–2005 |
| 06–221–009–1418 | திருமதி ஞானசங்கீதா | 15–12–2014 |

| | | |
|---|---|---|
| 06-221-009-2016 | திருமதி ஞானசங்கீதா | 07-07-2020 |

6.2 மனுதாரர் தற்சமயம் மேற்குறிப்பிட்ட 5 மின்இணைப்புகள் வழங்கப்படும் போது நிலத்தின் உரிமையாளராகிய தன்னிடம் திருமதி ஸ்டெல்லா மேரி அவர்களிடமிருந்து எந்தவொரு அறிவிப்பு செய்யாமல், தனக்கு தெரியாமல் மின்வாரிய அலுவலர்கள் மின்இணைப்பு வழங்கியுள்ளதாகவும் அதனை வேறு பாதையில் மாற்றி அமைக்குமாறும் மனுதாரர் திருமதி ஸ்டெல்லா மேரி அவர்கள் CGRF வாயிலாக புகார் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 திரு மரிய ஆரோக்கியம் த/பெ. மரியதாஸ் மற்றும் திருமதி ஞானசங்கீதா த.பெ. மரிய ஆரோக்கியம் ஆகியோரிடம் நில உரிமையாளரான தன்னிடம் மின் இணைப்புக்கான அனுமதி கடிதம் பெற்று சமர்ப்பிக்கவும், மேற்படி சட்ட விரோதமாக வழங்கப்பட்ட மின் இணைப்புகளால் தனக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு பொறுப்பு திரு மரிய ஆரோக்கியம், த/பெ. பெயரியதாஸ் மற்றும் திருமதி ஞான சங்கீதா, த/பெ. மரிய ஆரோக்கியம் ஆகியோரை சார்ந்தது எனவும் மனுதாரர் தெரிவித்ததன் காரணமாக திருமதி J. ஸ்டெல்லா மேரி அவர்களுடைய CGRF மனுவானது மின் நுகர்வோர் குறை தீர்க்கும் மன்றத்தில் பதிவு செய்யப்பட்டு மண்ற விசாரணை 27.08.2024 அன்று நடைபெற்று மன்ற ஆணை 06.09.2024 நாளிட்ட கடிதம் மூலம் பெறப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 மன்ற ஆணையில் மின் இணைப்புகளின் Service wire களை மனுதாரருடைய ஒத்துழைப்புடன் வேறு பாதையில் மாற்றி அமைக்க அறிவுறுத்தப்பட்டதாகவும், மனுதாரர் மாற்று வழி காண்பிக்க முன் வராத நிலையில் என்ற ஆணையின்படி கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்குறிப்பிட்ட மின் இணைப்புகளின் Service Wire அனைத்தும் பொதுப்பாதை வழியாகவே செல்வது வட்டாட்சியர் அலுவலக இணைய நில உரிமை (Town Survey Land

Register) ஆவணத்தின் மூலம் கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 மனுவில் குறிப்பிட்ட அணைத்து service wire களும் பொது பாதையில் செல்வது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதனை வேறுபாதையில் மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை எனவும், மேலும் மேற்படி சர்வீஸ் வயர்களும் மனுதாரருக்கு எவ்வித இடையூறும் இல்லாதவாறே அமைக்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 மேலும் மனுதாரர் விதிகளை மீறி வழங்கப்பட்ட மின் இணைப்புகளால் தனக்கு ஏற்பட்ட இழப்புகளுக்கு இழப்பீடு TANGEDCO விடமிருந்து பெற்றுத் தருமாறு மனுவில் குறிப்பிட்டுள்ளதாகவும், மேற்கண்ட 5 மின் இணைப்புகள் வாரிய விதிகளின் படி வழங்கப்பட்டுள்ளதாகவும், மேற்குறிப்பிட்ட மின் இணைப்புகளின் உரிமையாளர் திரு மரிய ஆரேக்கியம் மற்றும் திருமதி ஞான சங்கீதா அவர்கள் மனுதாரரின் நெருங்கிய உறவினர் ஆவார்கள். மேற்கண்ட மின் இணைப்புகள் வழங்கும் பொழுது எந்தவொரு மனுவோ அல்லது ஆட்சேபனையோ மனுதாரரிடமிருந்து எழவில்லை என தெரியவருகிறதாகவும், தற்போது மனுதாரர் அவர்களுடைய குடும்ப பிரச்சனை காரணமாக இந்த புகார் மனுவை அளித்துள்ளதாக விசாரணை மூலம் தெரியவருகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 எனவே, புகாரில் தெரிவித்துள்ளவாறு விதிகளை மீறி மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை என உறுதிசெய்யப்பட்டு TANGEDCO எந்த இழப்பீடும் வழங்க தேவையில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

**7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:**

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேற்கூறிய வாதி பிரதிவாதங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் தன்னுடைய வீட்டு அருகில் வசிப்பவர்களின் மின் இணைப்பிற்காக வழங்கிய காப்பிடப்பட்ட (insulated) service wire–ஐ உரிமதாரரால் அகற்றுமாறு எழுப்பும் கோரிக்கை மட்டும் இவ்வழக்கின் தீர்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

7.3 மேல்முறையீட்டாளர் அவர்களது நிலத்தின் வழியாக அவரது அனுமதியின்றி அவருக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் கீழ்கண்ட ஐந்து மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

| வ. எண். | மின் இணைப்பு எண் | பெயர் | மின்னிணைப்பு வழங்கப்பட்ட நாள் |
|---|---|---|---|
| 1 | 06–221–009–324 | மரிய ஆரோக்கியம் | 01.01.2006 |
| 2 | 06–221–009–325 | மரிய ஆரோக்கியம் | 01.01.2006 |
| 3 | 06–221–009–750 | மரிய ஆரோக்கியம் | 05.05.2005 |
| 4 | 06–221–009–1418 | ஞான சங்கீதா | 15.12.2014 |
| 5 | 06–221–009–2016 | ஞான சங்கீதா | 07.07.2020 |

7.4 மேலும் மேற்கூறிய மின் இணைப்பு பெற்றவர்கள் தன்னிடம் படிவம் 5–இன்படி உரிமை பெறவில்லை என்றும் படிவம் 6–இன்படி இருமடங்கு தொகை செலுத்தி Indemnity bond அளித்து மின் இணைப்பு பெறவில்லை என்பதாலும் திருமதி ஸ்டெல்லா மேரி Town Survey Land Register (கணினி பட்டா)–வை ஏற்றுக் கொண்டாலும் திருமதி ஸ்டெல்லா மேரி மற்றும் மரிய ஆரோக்கியம் அவர்களுக்கு கூட்டு பட்டாவே உள்ளதாலும் தனது நிலத்தின் உரிமையாளராகிய தனக்கு தெரியாமல் தனது அனுமதி அல்லாமல் நிலத்தின் வழியாக மின் இணைப்பு வழங்க கூடாது எனவும் ஆகவே உரிய நடவடிக்கை எடுக்குமாறும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.5 மனுதாரர் தெரிவித்த இடமானது கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது திருச்சி எடமலைப்பட்டி புதூர் புனித அந்தோனியார் கோவில் தெரு கதவு எண் 373 உள்ள நிலத்தில் மனுதாரர் திரு மரிய ஆரோக்கியம் மற்றும் திருமதி ஞான

சங்கீதா அவர்களுக்கு வாரிய விதிகளின் படி மேற்கண்ட மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மன்ற ஆணையில் மின் இணைப்புகளின் Service wire–களை மனுதாரருடைய ஒத்துழைப்புடன் வேறு பாதையில் மாற்றி அமைக்க அறிவுறுத்தப்பட்டதாகவும், மனுதாரர் மாற்று வழி காண்பிக்க முன்வராத நிலையில் மன்ற ஆணையின்படி கள ஆய்வு செய்யப்பட்டதில் மேற்குறிப்பிட்ட மின் இணைப்புகளின் Service Wire அனைத்தும் பொதுப்பாதை வழியாகவே செல்வது வட்டாட்சியர் அலுவலக இணைய நில உரிமை (Town Survey Land Register) ஆவணத்தின் மூலம் கண்டறியப்பட்டு உறுதி செய்யப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மனுவில் குறிப்பிட்ட அணைத்து service wire–களும் பொது பாதையில் செல்வது உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் அதனை வேறுபாதையில் மாற்றியமைக்க வேண்டிய அவசியம் எழவில்லை எனவும், மேலும் மேற்படி சர்வீஸ் வயர்களும் மனுதாரருக்கு எவ்வித இடையூறும் இல்லாதவாறே அமைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே, புகாரில் தெரிவித்துள்ளவாறு விதிகளை மீறி மின் இணைப்புகள் வழங்கப்படவில்லை என உறுதிசெய்யப்பட்டு TANGEDCO எந்த இழப்பீடும் வழங்க தேவையில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.8 மேற்கூறிய எதிர்மனுதாரர் சமர்ப்பித்த ஆவணங்களின் அடிப்படையில் மேல்முறையீட்டாளர் வீட்டிற்குள் எந்தவித மின்கம்பங்களோ மின்பாதையோ இல்லை என்பது தெரியவருகிறது. மேலும், அருகில் உள்ள வீட்டாளர்களுக்கு மின் கம்பத்திலிருந்து திரு மரிய ஆரோக்கியம் (own brother of the Tmty. Stella Mary) மற்றும் திரு மரிய ஆரோக்கியத்தின் மகளுக்கும் காப்பிடப்பட்ட service wire பொதுசாலையிலும் மற்றும் திரு மரிய ஆரோக்கியம், திருமதி ஸ்டெல்லா மேரி மற்றும் திருமதி ஞானசங்கீதா ஆகியோருக்கு மின் இணைப்பு வழங்கிய போதிலிருந்தே பொதுவழி பயன்பாட்டு பாதையை எந்தவித ஆட்சேபனையின்றி

கட்டிடங்களுக்கிடைய கிடைமட்ட இடைவெளி 6 அடியாகவும் தரைமட்ட இடைவெளி 10 அடியாகவும் காப்பிடப்பட்ட service wire–ஆக தான் மின் இணைப்பு வழங்க Town Survey Land Register மூலம் நிறுவப்பட்டது தெரிய வருகிறது.

7.9 இந்நிலையில் மேல்முறையீட்டாளர் படிவம் 5 மற்றும் 6–இன்படி செயல்படவில்லை என்று கூறுவது இவ்வழக்கிற்கு சம்பந்தமில்லாத கூற்றாகும். படிவம் 5 மற்றும் படிவம் 6 என்பது சட்டப்படியாக வசிப்பவருக்கும் உரிமையாளருக்கும் இடையே பிரச்சனையின் அடிப்படையில் மின் இணைப்பு பெறும்போது சமர்ப்பிக்கப்பட வேண்டிய ஆவணங்களாக இருக்கிறது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் வாதம் நிராகரிக்கப்படுகிறது.

7.10 மேலும் தமிழ்நாடு மின்சாரப் பகிர்மான விதித் தொகுப்புகளில் 27(6)–இல் கூறப்பட்டுள்ள வரையறைகளில் உள்ள கருத்துக்கள் கீழே பதிவு செய்யப்படுகிறது.

> *"நுகர்வோருக்குத் தரப்படும் மின்னிணைப்புக்குப் பேரளவு பாதிப்பு ஏதும் ஏற்படாதெனப் பொறியாளர் கருதும் போது நுகர்வோர் மின்மாற்றிகள், இணைப்பமைப்புகள், மின்னளவிகள் போன்ற அனைத்துத் தேவைப்படும் சாதனங்களை நிறுவவும் நுகர்வோரது இருப்பிடத்துக்கு இணைப்பு தரவும் அங்கிருந்து பிற நுகர்வோர்களின் இருப்பிடங்களுக்கு இணைப்பு தரவும் தேவைப்படும் மின் வடம், மேனிலைத் தொடர் மற்றும் பிற இணைப்புகளை அமைக்கவும் உரிமதாரருக்கு இசைவு தர வேண்டும்."*

7.11 மேற்கூறிய விதியின்படி மின் இணைப்பு ஒரு நுகர்வோரிடமிருந்து மற்ற நுகர்வோர்களுக்கு வழங்கும் போது இசைவு தரவேண்டும் என்ற முறையில் இருக்கும் நிலையில், இந்த மேல்முறையீட்டு மனுவில் மேல்முறையீட்டாளருக்கும் அவருடைய உறவினரான அண்ணன் திரு மரிய ஆரோக்கியம் மற்றும் திரு மரிய ஆரோக்கியம் அவர்களின் மகள் திருமதி ஞானசங்கீதா அவர்களுக்கு பொது பாதையில் நிறுவப்பட்ட மின் கம்பத்திலிருந்து மின் இணைப்பு வழங்கும் காப்பிடப்பட்ட service wire உரிய பாதுகாப்பு இடைவெளியுடனும் பொது சாலை மற்றும் பொது பாதையில் அடுத்தடுத்து உள்ள

வீட்டிற்கு மின் இணைப்பு வழங்கியதை 2024-க்கு பிறகு அகற்றக் கோரும் கோரிக்கையில் எந்தவித தகுதியில்லை என்பதாலும், மேலும் எதிர்மனுதாரரின் செயலில் விதிமீறல் இல்லை என்பதால் அவருடைய மற்ற கோரிக்கைகளும் நிராகரிக்கப்படுகிறது. ஆகவே இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

8.0 முடிவுரை:

8.1 மேற்கூறிய பத்திகளில் உள்ள தீர்வின்படி, எதிர்மனுதாரரின் செயலில் எந்தவித விதிமீறலும் இல்லை என்பதால் மேல்முறையீட்டாளரின் இந்த மேல்முறையீட்டு மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 88/2024 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**"No Consumer, No Utility"**

பெறுநர்

1) திருமதி ஜா. ஸ்டெல்லா மேரி, - By RPAD
கதவு எண் 60, லூர்து அன்னை இல்லம்,
புனித அந்தோணியர் கோவில் தெரு,
இலுப்பூர் – 622 102, புதுக்கோட்டை மாவட்டம்.

2) மேற்பார்வை பொறியாளர்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/பெருநகர்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
மன்னார்புரம் மெயின் ரோடு, திருச்சி – 620 020.

3) செயற்பொறியாளர்/ இ&கா/ கிழக்கு/திருச்சி,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/ பெருநகர்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
தரைதளம், காமராஜ் கட்டிடம், மன்னார்புரம் மெயின் ரோடு,
மன்னார்புரம் திருச்சி – 620 020.

4) உதவி செயற்பொறியாளர்/ இ&கா / கிராபோர்ட்,
திருச்சி மின் பகிர்மான வட்டம்/ பெருநகர்,
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்,
34, 43, பாப்பா காலனி, எடமலைபட்டிபுதூர், திருச்சி – 620 012.

5) தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By Email
தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் லிமிடெட்
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

6) செயலாளர், – By Email
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

7) உதவி இயக்குநர் (கணினி) – **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக**
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.